அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றுநிருபம் இல:01/2009

எனது இல:அசேஆ/ஈஎஸ்/சுற்றுநிருபம்
அரசாங்க சேவை ஆணைக்குழு
இல. 356பீ, காலி வீதி (கால்வில் பிளேஸ்)
கொழும்பு 03
2009 ஜனவரி மாதம் 23ஆந் திகதி

சகல அமைச்சு செயலாளர்கள் மற்றும்
திணைக்களத் தலைவர்களுக்கு

**2006ஆம் ஆண்டு வரவுசெலவு யோசனைக்கமைய அரசாங்க சேவைகளுக்கான சம்பள மீளாய்வின் கீழ் சேவைப் பிரமாணம் மற்றும் ஆட்சேர்ப்பு முறைகளைத் திருத்தம் செய்தல்**

பதினேழாவது (17) அரசியலமைப்பு சட்டமூல திருத்தத்தின் 61பீ பிரிவின் கீழ் செயலாற்றுவதன் மூலம் 2006.04.25 திகதிக்கான அரசாங்க நிருவாக சுற்றுநிருபம் இல. 06/2006 ஐ அவதானத்தில் கொண்டு வருவதுடன் அதன் பின்னிணைப்பு இல. 1ல் 4:3 பிரிவுக்கமைய அச்சுற்றுநிருபத்தை செயலாற்றும் முகமாக தேவையேற்படும்பொழுது சேவைப் பிரமாணம் மற்றும் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு முறைகளுக்கான திருத்தத்தை புதிதாக மாற்றியமைக்கும்படி தங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

02. அத்துடன் 17ஆம் அரசியமைப்பு சட்டமூல திருத்தத்தின் 55(1) பிரிவின் பிரகாரம், மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கமைய அரசாங்க சேவைக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு சம்பந்தமாக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் சேவைப் பிரமாணம் மற்றும் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு முறைகளில் திருத்தம் செய்வதன் மூலம் புதிதாக மாற்றி அமைக்கப்பட்ட சேவைப் பிரமாணம் மற்றும் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு முறைகளை அனுமதி அளித்தல் தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழு மற்றும் நிறுவன பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் விதப்புரைக்கமைய அரசாங்க சேவை ஆணைக்குழு மூலம் செயல்படுத்தப்படும்

03. இதற்கமைய திருத்தம் சம்பந்தமான சகல சேவைப் பிரமாணங்கள், ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு முறைகள் தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழு மற்றும் நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் விதப்புரையுடன் 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதியின் முன் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும்படி இத்தால் தெரியப்படுத்துகிறேன்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரைக்கமைய

எச்.டி.எல்.குனவர்தன
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு